# எம். அப்துர் ரஹ்மான், ஏ.எம். ஷாஜஹான், மில்லத் எஸ்.பி. இஸ்மாயில் சிங்கப்பூர் பயணம்

## ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் வரவேற்பு



சிங்கப்பூர், அக்.04-

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழக நிர்வாகிகளான முன்னாள் நாடாளுமன்ற எம். அப்துர் ரஹ்மான், மாநில செயலாளர் ஆடுதுறை ஏஎம். ஷாஜஹான், மாநில துணைச் செயலாளர் மில்லத் எஸ்பி. முஹம்மது இஸ்மாயில் சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), சென்ற வெள்ளிக்கிழமை 02-10-2015 அன்று, தாய்சபையின் தேசிய இளைஞரணி ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் வேலூர் பாராளுமன்ற உறுப்பினரும், ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் மாணவருமாகிய அப்துல் ரஹ்மான் அவர்களுக்கு, சிங்கப்பூரில் வரவேற்பு நிகழ்ச்சியொன்றை மிகச்சிறப்பாக நடத்தியது.

“சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் உருவாக, வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும் இருந்தவர் அண்ணன் அப்துல் ரஹ்மான்” என்று தனது வரவேற்புரையில் புகழாரம் சூட்டினார், சங்கத்தின் தலைவர் முனைவர் ஆடிட்டர் முஹிய்யத்தீன் அப்துல் காதர்.

“சமுதாய வளர்ச்சிக்கும், ஒன்றுபட்ட சமூகமாகத் திகழ்வதற்கும் நம் வாழ்வின் பெரும்பகுதியை தொடர்ந்து அர்ப்பணிக்க அனைவரும் முன்வரவேண்டும்” என்று தனது சிறப்புரையில் குறிப்பிட்டார் எம். அப்துல் ரஹ்மான்.

ஆடுதுறை அஸ்ஸலாம் பொறியியல் கல்லூரியின் தாளாளரும், மாநில கல்விப்பணி செயலாளருமாகிய ஷாஜஹான், மாநில துணைச் செயலாளரும் அய்யம்பேட்டை ஜம்ஜம் நிர்வாக இயக்குநருமாகிய மில்லத் எஸ்பி. இஸ்மாயில் ஆகியோரும் முக்கிய விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர்.

சங்கத்தின் துணைத்தலைவர் கலந்தர் மொஹிதீன், பொருளாளர் ஹபீபுல்லா, துணைச் செயலாளர் ஹாஜா செய்க் அலாவுதீன், சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களான கணிதப் பேராசிரியர் அமானுல்லா, சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் தமீம் தீன், எழுத்தாளர் ஷா நவாஸ், யுனைடெட் வோர்ல்ட் ஹலால் டிவலப்மெண்ட் நிறுவத்தின் தலைவர் முஹம்மது ஜின்னா, தொழிலதிபர் ஹமீது கவுஸ், சிங்கப்பூர் நாகூர் சங்கத்தின் செயலாளர் முஹம்மது கவுஸ், சிங்கப்பூர் பொதக்குடி சங்கத்தின் துணைத்தலைவர் அப்துல் மாலிக், சிங்கப்பூர் காயல்பட்டின நல அபிவிருத்தி சங்கத்தின் மதியுரைஞர் ஹாஜி பாளையம் முஹம்மது ஹசன், பிளாக்ஸ்டோன் டெலிகம்யூனிகேஷன் நிறுவனத்தின் இயக்குநர் ஆரிஃப் உள்ளிட்ட பலரும் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தனர்.

செய்தி: முனைவர் எம். ஏ. காதர்

தலைவர், ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர்)